MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on 28.09.2022 (Urgent)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| | **28.09.2022 ஆம் தேதி புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டம்**<br>முன்னிலை: **திரு.உ.முகமதுயாசின்,** நகர்மன்றத்தலைவர் | |
| 149 | **மன்றப்பொருள் எண்.1**<br><br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை 213 நாள். 09.11.2020 ன்படி 15வது மத்திய நிதிக்குழு 2020–21 Tied Grand திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட புல்பண்ணை பகுதியில் நுண்ணுயிர் உரக்கிடங்கு (MCC) ரூ50.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு, M/s அஸ்மா பிரசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 25.01.2022 ல் வழங்கப்பட்ட பணி உத்தரவின்படி பணி தொடக்கப்பட்ட நிலையில் புல்பண்ணையில் புதை மணல் மற்றும் நீர் நிரம்பியிருந்தபடியால் எதிர்புறத்திலிருந்து அரசு புறம்போக்கு நிலத்தில் பணி துவங்க உத்தேசிக்கபட்டது. பொது மக்கள் அப்பகுதியில் நுண்ணுயிர் உரக்கிடங்கு அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்ததின் அடிப்படையில் , மதுரை நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களால் 24.09.2022ல் மேற்கண்ட இடத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது மேற்கண்ட பகுதியில் R.C பள்ளி உள்ளதாக தெரிவிக்கப்பட்ட பொதுமக்கள் கருத்தினை ஏற்று, மேற்கண்ட பகுதியில் நடைபெற உள்ள நுண்ணுயிர் உரக்கிடங்கு அமைக்கும் பணியினை இந்நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.205/72 பழைய உரக்கிடங்கில் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி வழங்ப்பட்ட பணி இடத்திற்கு மாறுதலாக அதே ஒப்பந்தபுள்ளி விகிதத்தில் அதே ஒப்பந்ததாரரைக் கொண்டு நுண்ணுயிர் உரக்கிடங்கு அமைக்கும் பணி மேற்கொள்ள மண்டல செயற்பொறியாளரால் அறிவுரை வழங்கப்பட்டதின்பேரில் இந்நகராட்சி பழைய உரக்கிடங்கு பகுதியில் மேற்படி பணிக்காக இடம் மாற்றி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதார பணியின் அவசியம் கருதி இந்நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.205/72 பழைய உரக்கிடங்கு பகுதியில் நுண்ணுயிர் உரக்கிடங்கு அமைக்கும் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 150 | **மன்றப்பொருள் எண்.2**<br>இந்நகராட்சி வார்டு எண்.21, மலம்பட்டி ஊரணியினை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–22 ன் கீழ்ரூ.87.47 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டு பணியினை திருமிகு. ராம்.அன்ட் கோ நிறுவனத்தினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மதிப்பீட்டில் கரையின் சாய்வுப்பகுதியில் சிலாப் அமைப்பதற்கு (revetment) 3 மீட்டர் அளவு உயரத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்பேரில் பணிமேற்கொள்ளும் பொழுது நகர்மன்ற உறுப்பினர் மற்றும் அந்த பகுதி மக்கள் குளத்தின் சாய்வு பகுதியினை தற்பொழுது இருக்கும் 6m மீட்டர் உயர அளவினிலேயே மேம்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் தற்பொழுது உள்ள ஊரணியின் உயர அளவிற்கே பணியினை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியதின் பேரில் ஊரணியினை தற்பொழுது உள்ள 6 மீட்டர் உயர அளவிற்கு ( revetment) உயர்த்தி அழகுபடுத்தி மேம்பாடு செய்யும் பணிக்காக கூடுதல் செலவினத்தொகை ரூ.30.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டதற்கும் மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு நிர்வாக அனுமதி கோரி கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |